# ஊடக அறிவித்தல்

## அரச மற்றும் அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு -2016

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொலைபேசி: 0112147473 தொலைநகல்: 0112147474

---

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் நடாத்தும் தொகைமதிப்புத் தொடர்பில் எட்டாவது அரச மற்றும் அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு - 2016 இனைத் திணைக்களம் 2016 நவம்பர் 17 ஆம் திகதி நடாத்தியது. முதலாவது விஞ்ஞான முறையிலான அரச மற்றும் அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு, அதிகரித்து வரும் அரச, அரச சார்புத்துறை சம்பந்தமான தரவுகளின் தேவையை ஈடு செய்யும் நோக்கில் 1980 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக 1985, 1990, 1994, 1998, 2002, 2006, 2016 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டன. 1980 இற்கு முன்னர் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு 1968, 1972, 1976 ஆம் ஆண்டுகளில் தொகைமதிப்புக்களை நடாத்துவதற்கான கருவியாகச் செயற்பட்டது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட அரச, அரச சார்புத்துறையை உள்ளடக்கிய தொகைமதிப்பினை அடுத்து நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்பட்ட தொகுப்புக்களின் அடிப்படையிலான ஆரம்ப அறிக்கை ஒன்று திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையானது தற்போது இணைக்கப்பட்டுள்ள பணியிடங்களிலுள்ள பணியாளர்கள் சம்பந்தமான தகவல்களை வழங்குகின்றது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி. ஏ. ஜே. சத்தரசிங்க அவர்கள் முப்படையினர் நீங்கலாக அரச, அரச சார்புத்துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கையானது 54.9 சதவீதம் ஆண்களையும் 45.1 சதவீதம் பெண்களையும் உள்ளடக்கி 1,117,808 ஆகக் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் 7.6 சதவீதமான பணியாளர்கள் 56 வயதிற்கு மேற்பட்டோர் எனவும் 15 சதவீதம் மற்றும் 77.4 வீதமானோர் முறையே 18 - 29 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும் 30 - 55 வயதுப் பிரிவிற்கு இடைப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனரெனவும் தொகைமதிப்புப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன.

மொத்த அரச மற்றும் அரச சார்புத்துறைப் பணியாளர்களில் 95 சதவீதத்தினர் நிரந்தரப் பதவியை வகிக்கின்றனர் என இத்தொகைமதிப்புத் தரவுகள் குறிப்பிடுகின்றன. அவற்றில் 75.6 சதவீதத்தினர் நிரந்தர, ஓய்வூதிய உரித்துடைய பணியாளர்களெனவும் 3.9 சதவீதத்தினர் நிரந்தர, ஓய்வூதிய உரித்துடன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் பங்களிப்புச் செலுத்துபவர்கள் எனவும் 15.7

வீதத்தினர் நிரந்தரமான மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செலுத்துவோர் எனவும் இந்தத் தொகைமதிப்பு வெளிப்படுத்துகின்றது.

அத்துடன் தொகைமதிப்பின் ஆரம்பப் பெறுபேறுகள், பணிபுரியும் பெரும்பாலான உத்தியோகத்தர்களில் அதாவது 35.8 சதவீதத்தினர் க.பொ.த. (உ./த.) தகைமையைக் கொண்டிருந்ததுடன் ஏறத்தாழ நான்கு பணியாளரில் ஒருவர் (26.1 சதவீதம்) பட்டம் ஒன்றை அல்லது அதிலும் உயர் தகைமையைக் கொண்டுள்ளனர்.

அரச, அரச சார்புத்துறைப் பணியாளரில் 62.7 சதவீதத்தினர் மேசைக் கணினி/ மடிக் கணினி/ டெப்லட் கணினி ஒன்றையோ ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி ஒன்றையோ பயன்படுத்திப் பணிபுரியும் ஆற்றல் கொண்டவர்களெனவும் ஒவ்வொரு இரு பணியாளர்களில் ஒருவர் சர்வதேச வலைப் பின்னலை (இணையத்தைப்) பயன்படுத்துகின்றனரெனவும் அரச மற்றும் அரச சார்புத்துறைப் பணியாளர்களின் கணினி அறிவு மட்டங்களையும் இந்தத் தொகைமதிப்பு வெளிப்படுத்துகின்றது.

அரச மற்றும் அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு – 2016 இன் ஆரம்ப அறிக்கையைத் திணைக்களத்தின் இணையமான www.statistics.gov.lk இலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம்

2017. பெப்ரவரி 17.